09.03.2026

அ.வ.எண். 86/2020

**வா.சா.1 – திருமதி. சரண்யா, த/பெ.சின்னசாமி, க/பெ.மூர்த்தி**

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 09.03.2026 is accordance with the provision of Act X of 3331

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் கிரய ஒப்பந்தத்தின் படி கிரயம் செய்து கொடுக்க பிரதிவாதிகள் முன் வரவில்லை. அதனால் கிரய ஒப்பந்தத்தை ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சாஆ.1 ஆவணத்தின்படி என் தகப்பனார் சின்னசாமி, தங்கராஜிற்கு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் சரிதான். வா.சாஆ.1 ஆவணத்தின் முழு ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின் சொத்து விவரம் இல்லை என்றால் சரிதான்.

2. என் அப்பா, தங்கராஜிற்கு பவர் எழுதி கொடுத்ததாக சொல்லியுள்ள நிலையில் மேற்படி தங்கராஜை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். மேற்படி பவர் ஆவணத்திற்கு முன்பாக என் தகப்பனார் தங்கராஜ் பெயரில் கடந்த 15.09.2003 அன்று கிரய ஒப்பந்தம் ஆவண எண்.3630/2003 எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. வா.சாஆ.7 வில்லங்கச சான்றிதழில் , கிரய ஒப்பந்தம், கிரய ஒப்பந்த ரத்து விவரங்கள், பவர் எழுதி கொடுத்த விவரம் உள்ளது என்றால் சரிதான். என் அப்பா, தங்கராஜிற்கு கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்த போதும் வா.சா.ஆ.1 பவர் ஆவணம் எழுதி கொடுத்தபோதும் எவ்வளவு தொகை வாங்கினார் என்று தெரியாது என்றால் ரூ.10,000/- வாங்கிகொண்டு தங்கராஜிற்கு பவர் எழுதி கொடுத்தார்.

3. 04.06.1952 பாகப்பிரிவினை பத்திரத்தை இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.1 பொது அதிகார பத்திரம், வா.சா.ஆ.2 கிரய ஒப்பந்த பத்திரம், 04.06.1952 பாகப்பிரிவினை பத்திரத்தின் அசல் ஆவணங்கள் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி அசல் ஆவணங்களை

என்னால் தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். மேற்படி அசல் ஆவணங்கள் யார் எப்போது, என்னிடம் கொடுத்தார்கள் என்றால் தேதி தெரியாது. என் அப்பாவின் பெரியப்பா அதாவது என் பெரிய தாத்தா சென்னியப்ப கவுண்டர் வீட்டில் வைத்து கொடுத்தார்.28.02.2007 தேதியில் எனக்கு 17 வயது ஆகும். வாச.ா.ஆ.1 பொது அதிகார ஆவணம் ஏற்பட்டபோது தங்கராஜிடமிருந்து, என் தகப்பனார் சின்னசாமி ரூ.55,000/- பணத்தை பெற்றுக்கொண்டு பொது அதிகார ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் சரியல்ல. ரூ.10,000/- தான் வாங்கியதாக சொன்னார். முழு தொகையும் பெறாமல் பொது அதிகார ஆவணம் எழுதி கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல.

4. நானும், தங்கராஜும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். 2007 ம் ஆண்டு என் தகப்பனார் நல்ல உடல்நிலையில் இருந்தார் என்றால் ஆமாம். என் அப்பா என்ன காரணத்திற்காக தங்கராஜிற்கு பவர் ஆவணம் எழுதி கொடுத்தார் என்றால் தெரியாது. பொதுவாக பவர் ஆவணம் கொடுக்கும்போது ஒரு நபர் வெளியூரில் இருக்கும்போதும், உடல்நிலை சரியில்லாதபோதும், அவரது குடும்ப உறுப்பினருக்கு பவர் ஆவணம் எழுதி கொடுப்பார் என்றால் சரிதான். தங்கராஜ் எனது தூரத்து உறவினர் ஆவார். வா.சா.ஆ.1 பவர் ஆவணத்தில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்று தெரியாது, மேற்படி பவர் ஆவணம் என்ன சூழ்நிலையில் எழுதப்பட்டது என்றால் தெரியாது.

5. வா.சா.ஆ.2 கிரய ஒப்பந்த பத்திரம், தங்கராஜ், 1ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 பத்திரத்தை தங்கராஜ் 1ம் பிரதிவாதிக்கு எழுதிகொடுத்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தை நான் எப்போது பெற்றேன் என்றால் என் தங்கை கணவர் வாங்கினார். வா.சா.ஆ.2 ஆவணத்தின் அசல் ஆவணம் தங்கை கணவரிடம் உள்ளது. வா.சா.ஆ.2 ஆவணத்தை பார்த்த பின்னிட்டு கிரயம் செய்து கொள்ளவோ அல்லது கிரயத்தை ரத்து செய்யவோ அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை, வீட்டில் உள்ள பெரியவர்களை வைத்து பேசினோம்.

6. 04.06.2008 தேதியில் என் தகப்பனார் இறந்த பின்னிட்டு, சொத்தானது யாருடைய அனுபவத்தில் உள்ளது என்றும், தங்கராஜ், தங்கவேலுக்கு கிரய ஒப்பந்தம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என் தகப்பனார் இறந்த பின்னிட்டு 12 ஆண்டுகள் கழித்து வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். என்னுடைய வழக்குரையில் மேற்படி ஆவணங்கள் குறித்து எந்த தேதியில் தெரிய வந்தது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 பொது அதிகார நாள் முதல் தங்கராஜிடம் சொத்தின் சுவாதீனம் ஒப்படைக்கப்பட்டு, வா.சா.ஆ.2 ஆவணத்தின் படி பிரதிவாதி தற்போது சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. பத்திரம் எனது பெயரிலும், எனது தங்கை பெயரிலும் உள்ளது.

7. தங்கராஜை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தால் உண்மை விவரம் தெரியவரும் என்பதால் இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி, தங்கராஜிற்கு முழு கிரய தொகையும் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2008 ல் என் தகப்பனார் இறந்த பின்னிட்டு, சொத்தை விற்பனை செய்த விவரம் தெரிந்ததால் தான் எவ்வித சட்ட நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது ஆவணம் பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலையால் அதிக தொகையை பறிக்க பொய்யான வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.தங்கராஜை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காததால், இந்த வழக்கில் வழக்கு மூலம் இல்லாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலதாமத வரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுஎ ன்றால் சரியல்ல. வழக்கு சொத்தின் சுவாதீனம் பிரதிவாதி வசம் உள்ளதை தெரிந்துகொண்டு சுவாதீனத்தை ஒப்படைக்க கோராததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றால் சரியல்ல. சுவாதீனம் எங்களிடம் இல்லாததால் தான் பட்டா, சிட்டா வருவாய் ஆவணங்ளை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd./M.Santhosham
District Munsif, Sulur